# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,014 — 1933 ம் ஹு ஐப்பசிமீ 20 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### காணிக்குத்தகை விற்பனவுகள்.

*கீழ் மாகாணத்தில் காணிக்குத்தகை விற்பனவு.*

பின்னுல விபரிக்கப்படும் முடிக்குரிய காணித்துண்டுகளை தென்னைச் செய்கைக்காக அரசாட்சியாரின் 99 வருடக் குத்தகையின கட்டுப்பாடுகளின் பிரகாரம் 1933 ம் ஆண்டு (டிசம்பர்) மார்கழி மாசம் 9 ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் கீழ் மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் ஏலத்திற் கூறிவிறபார். ஏற்படுத்திய குத்தகைக கிரயத்தைக் கட்டத்தெரிபடும் கூடிய கேள்விக்காரனுக்கே குத்தகை கொடுக்கப்படும். குத்தகையின் நிபந்தனைகளும் இககாணிகளின் மறு விபரங்களும் கீழ் மாகாணத்து அரசாட்சி ஏசண்டரிடமும் இக்காணிகளின் படங்கள் அளவைக் கந்தோர்த் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதமபடம் இல. 5,723. கிராமம்—புன்னைக்குடா. பற்று—ஏருவூர். டிஸ்திறிக்—மட்டக்களப்பு.

| தண்டு. இல. | காணிப் பெயர். | விபரம். | கேள்விக்காரன் பெயர். | விசாலம். ஏ | று | ப. | ஏற்படுத்திய குத்தகைக கிரயம் ஏக்கர் ஒன்றுக்கு ரு. ச. | முதல 30 வருடத்திற்கும் சட்டவேண்டிய வருடாந்த வாடகை ஏக்கர் ஒன்றுகது. முதல் 6 வருட வாடகை ஏக்கர் ஒன்றுக்கு வருடமொன்றுக்கு ரு. ச. | அடுத்த 24 வருட வாடகை ஏக்கர் ஒன்றுக்கு வருடமொன்றுக்கு ரு. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | புளியடித்தோணப் பூமி | சிறுகாடு .. | செங்கல்லடி, ஏ. துரையப்பா இராசநாயகம் | 11 | 3 | 0 | .. 4·30 | .. 0·60 | .. 1·80 |
| 5 | ஷை .. | ஷை .. | ஷை .. | 2 | 0 | 34 | .. 4·30 | .. 0·60 | .. 1·80 |
| 4 | ஷை .. | வண்டில் பாதைக்கருகே சேமிக்கப்பட்டது | — .. | 0 | 0 | 24 | .. — | .. — | .. —* |

பிரதமபடம் இல. A 17. கிராமம்—வாழைச்சேனை (தமிழ்). பற்று—கோறளை. டிஸ்திறிக்—மட்டக்களப்பு.

| தண்டு. இல. | காணிப் பெயர். | விபரம். | கேள்விக்காரன் பெயர். | விசாலம். ஏ | று | ப. | ஏற்படுத்திய குத்தகைக கிரயம் ஏக்கர் ஒன்றுக்கு ரு. ச. | முதல் 6 வருட வாடகை ஏக்கர் ஒன்றுக்கு வருடமொன்றுக்கு ரு. ச. | அடுத்த 24 வருட வாடகை ஏக்கர் ஒன்றுக்கு வருடமொன்றுக்கு ரு. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | கதியாண்ட பள்ளம் | சிறுகாடு .. | மட்டக்களப்பு, என். எஸ். இராசையா, பிறக்கிராசி | 3 | 2 | 29 | .. 2·70 | .. 0·90 | .. 2·70 |
| 1 | ஷை .. | காலடிப் பாதைக்காகச் சேமிக்கப்பட்டது | — .. | 0 | 1 | 6 | .. — | .. — | .. —* |

குறிப்பு :—* சேமிக்கப்படும்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஹு ஐப்பசிமீ 18 ந் திகதி.

ஆர். எம். எம். வூர்ஸ்லி,
எக்டிங் காணிக் கொம்மிஷனர்.

---

1933 ம் ஆண்டு மார்கழிமீ 4 ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் கச்சேரியில் மன்னார் டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசன்றவர்களால் கீழே சொல்லப்பட்டிருக்கும் வட மாகாணம் மன்னார் டிஸ்திறிக மன்னார் சுகாதாரசங்க எல்லைக்குள் பெரியகடைப் பிரிவில் இருக்கும் முடிக்குரிய காணிதுண்டை அரசாட்சியாரால் முடிகுரிய காணிகளைக் குத்தகை கொடுத்தலைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்தில் கூறிக் குத்தகையாய்க் கொடுககப்படும்.

காணி 25 வருஷத்துக்குக் குத்தகைக்கு கொடுக்கப்படும். குத்தகைகாரன் விரும்பினால் மேலும் 25 வருஷத்துக்குக் குத்தகை நீடிக்கப்படும்.

குத்தகைகாரன் குத்தகை தொடங்குந் திகதியிலிருந்து ஒரு வருஷத்துக்குள் தன்னுடைய சொந்தச் செலவில் மன்னார் உதவி அரசாட்சி ஏசென்றவர்களால் முன்னதே எழுத்துமூலமாய் அனுமதிக்கப்பட்ட படங்களில் காட்டப்பட்டிருக்கும் பிரகாரம் கான்களுடனும் மற்றும் வசதிகளுக்கேற்ற தொடுப்புக் கட்டுகளுடனும், பலவித தேவைகளுக்கேற்றபடி உபயோகிக்கப்பட்ட மரம் தடி மறுபொருள்களெல்லாம் முதற்தரமானதாயும், உடனேயும வசதியாயும் பாவிக்கக்கூடியதாயுள்ள குதம் அல்லது கடை அல்லது பண்டகசாலைக்கேற்ற கட்டடம் ஒன்று வடிவாயும் பெலனுள்ளதாயும கட்டவேண்டும்.

இக்குத்தகைக்குரிய வேறு நிபந்தனைகளைப்பற்றி மன்னார் உதவி அரசாட்சி ஏசன்றவர்களிடமிருந்து அறிந்து கொள்ளலாம். கூடிய தாரிப்புக்குத்தகைக் கொள்விலைப்பணக கேள்விக்காரனே குத்தகை கொண்டவனாவான். அவன் வருஷத்துக்கு 15 ரூபா வீதம் முற்பணமாயும் ஒரு கழிவுமில்லாமலும் குத்தகைக்காசு கட்டவேண்டும். இக்குத்தகைக் காசைப்பற்றி மன்னார் உதவி அரசாட்சி ஏசன்றவர்களால் ஒவ்வொரு 5 வருஷங்களுக் கொரு முறை திரும்பவும் ஆராயப்படும். ஆனால் ஒரு 5 வருஷக குத்தகைப்பணம் முன் கழிந்துபோன 5 வருஷங்களில் கட்டிய குத்தகைப் பணத்தின் அரைப்பங்குக்கு மேலான தொகையால் கூட்டப்படமாட்டாது.

பட்டண அளவுக் கடைசிப் பிரதமபடம் இல. 15. மன்னார் சுகாதார சங்க எல்லைக்குள் இருக்கும் பெரிய கடைப்பிரிவு.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | காணித்துண்டின் தாரிப்புக் குத்தகைக்கொள் விலைப்பணம் ரூ. |
|---|---|---|---|---|
| 113o | மண்ணெண்ணெய்க்குத் தருகாமைக் காணி | கட்டடம் போடுவதற்கேற்ற வெளிநிலம் .. | 0 0 3·36 | 15 |

காணிக் கொமிசனர் கந்தோர்,
கொழும்பு 1933 ம் ஆண்டு ஐப்பசிமீ 7 ந் திகதி.

ஆர். எம். எம். வூர்ஸ்லி,
எக்றிங் காணிக்கொமிசனர்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கெற்றிமுல்லை—டிவலை, உசாப்பிற்றியா ருேட்டில் 7 ம் கட்டையில் திருத்தஞ்செய்யவும், கல்லுக்குழி தோண்ட என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 13. குறிச்சி—லவுக்கை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | லவுக்கைத்தோட்டம் | நபர், தென்னந்தோட்டம் 10–25 வருஷமுள்ள 19 நபர் மரங்களடங்கியது | சில். நத்துவத்தை, டீ. எல். நத்துவத்தை | 0 0 27·6 |
| 2 | ஷை .. | நபர், தென்னந்தோட்டம் 10–25 வருஷமுள்ள 9 நபர் மரங்களும், 3–5 வருஷமுள்ள 2 தென்னைகள் | ஷை .. | 0 0 15·7 |

எடுத்துக்கொள்வதற்கான ஏத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஸ்ரீ கார்த்திகை மாசம் 17 ந் தேதியிலன்று 10 மணிக்கு கேகாலை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1933 ம் ஸ்ரீ அகடோபர்மீ 12 ந உ.

ஈ. ஏச். ஹூசெற்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## நகர டிஸ்திறிக்சங்க அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்.

இத்தால் அறிவிக்கப்படுகிறதாவது, 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 26 ம் பிரிவின்படி ஐரோப்பியர், பர்கர்மார், அல்லது இலங்கையூரவர்கள் 1934 ம், 1935 ம், 1936 ம் வருஷங்களுக்கு புத்தளம்—சிலாபம் டிஸ்திரிக் கொமிட்டியின், அங்கத்தவராக, அந்த உத்தியோகத்தை கேட்க நினைத்திருக்கிற யாவரும், தங்கள் எண்ணத்தைத, தெரிந்துகொள்ளுகிறதற்காக. தெரிவுநாளைக் குக் குறைந்தது. 10 நாளைக்கு முன்னே வடமேல் மாகாணத்தைச்சேர்ந்த பிறவின்சியல் ருேட்டுக் கொமிட்டியின் சங்கத் தலைவருக்கு, எழுதி அறிவிக்கும்படி இத்தால் கேட்கப்படுகிறது.

1933 ம் ஸ்ரீ (டிசெம்பர்) மார்கழிமீ 9 ந் திகதி, காலை 10 மணிக்கு புத்தளம் கச்சேரியில் தெரிவுசெய்தல் நடைபெறும்.

எஸ். டீ. சமரசிங்க.
சர்க்கத்தார்.

பிறவின்சியல் ருேட்டுக் கொமிற்றி, குருநாக்கல்.
1933 ம் ஆண்டு (ஒக்ரோபர்) ஐப்பசிமீ 17 ந உ.

---

இத்தால் அறிவிக்கப்படுகிறதாவது, 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின 26 ம் பிரிவின்படி ஐரோப்பியர், பர்கர்மார், அல்லது இலங்கையூரவர்கள் 1934 ம், 1935 ம். 1936 ம் வருஷங்களுக்கு குருநாக்கல் டிஸ்திறிக் கொமிட்டியின், அங்கத்தவராக, அந்த உத்தியோகத்தை கேட்க நினைத்திருக்கிற யாவரும், தங்கள் எண்ணத்தைத் தெரிந்துகொள்ளுகிறதற்காக, தெரிவுநாளைக்குக் குறைந்தது 10 நாளைக்கு முன்னே வடமேல் மாகாணத்தைச்சேர்ந்த பிறவின்சியல் ருேட்டுக் கொமிட்டியின் சங்கத் தலைவருக்கு எழுதி அறிவிக்கும்படி இத்தால் கேட்கப்படுகிறது.

1933 ம் ஸ்ரீ (நொவெம்பர்) கார்த்திகைமீ 21 ந் திகதி, காலை 10 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் தெரிவுசெய்தல் நடைபெறும்.

எஸ். டீ. சமரசிங்க,
சர்க்கத்தார்.

பிறவின்சியல் ருேட்டுக் கொமிற்றி, குருநாக்கல்,
1933 ம ஆண்டு (ஒகரோபர்) ஐப்பசிமீ 17 ந உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

இத்தால் சகலருமறிய வேண்டியது முல்லைத்தீவு செல்லையா தம்பையா ஆகிய நான் முல்லைத்தீவில் இருப்பிடமும் கந்தோரும் வைத்து முல்லைத்தீவு டிஸ்திரிக் முழுவதிலும் தமிழ் பாஷையில் நொத்தாரிஸ் உத்தியோகம் நடாத்த ஏற்றுக்கொள்ளும்படி பதிவு காரியகர்த்தருக்கு இன்று தொடக்கம் மூன்று மாதத்தின்பின் விண்ணப்பஞ்செய்ய எண்ணி இருக்கிறேனென விளம்பரம் செய்கிறேன்.

இங்ஙனம்,
செ. தம்பையா.

முல்லைத்தீவு, 1933 ம் ஆண்டு ஐப்பசிமீ 2 ந உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.